செ.வெ.எண்: 322 நாள்: 19.06.2021

**அனைத்து தரப்பு மக்களின் மத உணர்வுகள், நம்பிக்கைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் அரசாக தமிழக அரசு திகழ்கிறது.**

**மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி ஒருகால பூஜை நடைபெறும் திருக்கோவில்களில் பணிபுரியும் பூசாரிகள், பட்டாச்சாரியர்கள், அர்ச்சகர்களுக்கு கோவிட் நிவாரணத் தொகை ரூ.4,000 மற்றும் நிவாரணப் பொருட்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் இன்று (19.06.2021) புதுக்கோட்டை திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவிலில் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

பின்னர் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோவிட் நோய் தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் மேற்கொண்ட போர்க்கால நடவடிக்கையின் காரணமாக தமிழகத்தில் கோவிட் தொற்று பெருமளவு குறைந்துள்ளது. மேலும் தமிழக அரசின் சார்பில் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் கோவிட் நிவாரண உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் கோவிட் காலத்தில் வாழ்வாதாரம் இழந்துள்ள மாதச்சம்பளம் இன்றி பணிபுரியும் திருக்கோவில் பணியாளர்களுக்கு கோவிட் நிவாரணத் தொகை மற்றும் நிவாரணப் பொருட்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை கட்டுபாட்டில் உள்ள ஒருகால பூஜை நடைபெறும் திருக்கோயில்களில் பணிபுரியும் பூசாரிகள், பட்டாச்சாரியர்கள், அர்ச்சகர்களுக்கு புதுக்கோட்டை திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் கோவிட் நிவாரணத் தொகை ரூ.4,000 மற்றும் 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் கொண்ட நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் 331 பயனாளிகளுக்கு ரூ.13.24 லட்சம் மதிப்பீட்டில் நிவாரணத் தொகையும் மற்றும் நிவாரணப் பொருட்களும் வழங்கப்படுகிறது.

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்றும் துணை நிற்பார். இதே போன்று குடும்ப அட்டைதாரர்களும் கோவிட் நிவாரணத் தொகை இரண்டு கட்டமாக ரூ.4,000 மற்றும் 14 வகையான மளிகைப் பொருட்கள் தொகுப்பும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஆலயங்களில் பணியாற்றும் அனைவரின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு என்றும் துணை நிற்கும். அனைத்து தரப்பு மக்களின் மத உணர்வுகள், நம்பிக்கைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் அரசாக தமிழக அரசு திகழ்கிறது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கமாகும். இவ்வாறு மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா அவர்கள், முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.கே.கே.செல்லப்பாண்டியன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் சுரேஷ், வருவாய் கோட்டாட்சியர் அபிநயா மற்றும் நைனாமுகமது, வீரமணி, பாலு உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**